# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Email :mtdruitttsc@gmail.com  Mobile: 0449 892 066  Web : www.mtsc.org.au*


## பேச்சுப்போட்டி– 2018

## ஆண்டு 8

### நம்மோடு நம் தமிழும் வாழ வேண்டும் !

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!

“நம்மோடு நம் தமிழும் வாழவேண்டும்” என்ற தலைப்பில் பேசுவது குறித்து மிக மகிழ்வடைகிறேன். புலம்பெயர் நாடுகளில் – குறிப்பாக நம்மை வரவேற்று வாழ வைத்துக் கொண்டிருக்கும் இந்த நாட்டில் நம்மோடு சேர்ந்து நம் தமிழையும் நாம் வாழ வைக்க வேண்டாமா? நிச்சயம் நாம் இதனை செய்துதான் ஆகவேண்டும் ! இல்லையென்றால் நாமே நம்தமிழை இந்த நாட்டில் மரணிக்கவிட்ட மாபாவத்தை சுமக்க நேரிடும்.

“வாழ்க தமிழ்மொழி, வளர்க தமிழ்மொழி”– என்று மட்டும் பாடிக்கொண்டிருப்பதால் பயனேதும் விளையாது. அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் தமிழ்மொழியைக் கொண்டு செல்ல வேண்டும். வளமான நம் தமிழ் நிலையாக இந்நாட்டில் நீடித்து வாழ வேண்டும். இதனை நம் இளந்தலைமுறையினரால் நிச்சயம் சாதிக்க முடியும். இதற்கு தமிழ் பற்றிய அடிப்படை அறிவு, புரிந்துணர்வு, ஆர்வம் ஆகியன மிக முக்கியமானவை. இதற்கான அடித்தளத்தை தமிழ் கல்வி நிலையங்களும், தமிழ் பாடசாலைகள் கூட்டமைப்பும் செய்துகொண்டு தான் இருக்கின்றன. ஆனால் இங்குள்ள அனைத்து தமிழ்ச் சமூகமும் ஆர்வம் காட்டுகின்றதா? இல்லை . . . இல்லவே இல்லை. “தமிழ் படித்து என்ன செய்யப் போகிறோம்” என தமிழை இழிவுபடுத்துகின்ற பல ஆயிரம் பேர் இந்நாட்டில் உள்ளனர்.

அதனால் தமிழ் பெற்றோர்களே ! உங்களிடம் ஒரு அன்பான வேண்டுகோளை முன்வைக்கின்றேன். அது என்ன தெரியுமா ?

தமிழ் படிக்க, பேச ஆர்வமற்றிருப்பவர்களிடம் “தமிழர் என்ற இன அடையாளத்தை தயவுசெய்து தொலைத்து விடாதீர்கள்” என கூறி தமிழை படிக்க ஆர்வம் ஊட்டுங்கள். தமிழை நேசிக்கின்ற ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கட்டாயக் கடமை இது.

பேசுகின்ற மொழியால் தான் ஒரு இனம் அடையாளப்படுத்தப்படுகின்றது. எனவே “நாம் தொடர்ந்தும் தமிழர்களாக வாழவேண்டுமென்றால் நம்மோடு நம் தமிழும் வாழவேண்டும்” எனக்கூறி என் உரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் எஸ்.கனகசிங்கம்